பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 08-2025 FRIDAY 12.40 PM

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) பீகார் மாநிலத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஏற்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா திருநெல்வேலியில் இன்று பிஜேபி வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

3) ஜம்மு கஷ்மீரில் கடந்த நான்காண்டுகளில் 27 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

4) சென்னை தினத்தையொட்டி தமிழக ஆளுநர் மற்றும் முதலமைச்சர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

5) 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<<>>>>>

பீகார் மாநிலத்தில் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஏற்படுத்த தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கயாவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்த பிரதமர் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

கங்கை ஆற்றின் குறுக்கே பெகுசாராய் - மொகாமா நகரங்களை இணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தை திறந்து வைத்த பிரதமர், வைசாலி – கோதர்மா இடையேயான புத்தமத தலங்களுக்கான சுற்றுலா ரயில் மற்றும் தில்லி – கயா அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவையையும் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், புனித பூமியான கயாவில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைப்பதில் தாம் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார்.

*பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கிவைக்கப்பட்ட இந்த திட்டங்கள், மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.*

*முன்னதாக கயா விமான நிலையத்தில் இருந்து நிகழ்ச்சி அரங்கிற்கு வந்த பிரதமரை சாலையின் இருமருங்கிலும் திரண்டிருந்த ஏராளமான மக்கள் வரவேற்றனர்.*

<<<<<<<<>>>>>

*மத்திய உள்துறை அமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு அமித் ஷா இன்று தமிழகம் வருகிறார்.*

*கேரள மாநிலம் கொச்சியில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வரும் அவர், அங்கிருந்து ஹெலிகாப்டரில் திருநெல்வேலி வருகிறார்.*

*அங்கு பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் இல்லத்தில் கட்சியின் மூத்த தலைவர்களுடன் திரு அமித் ஷா ஆலோசனை நடத்துகிறார்.*

*அதனைத் தொடர்ந்து, பிஜேபி வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் திரு அமித் ஷா இன்றிரவே புதுதில்லி திரும்புகிறார்.*

<<<<<<<<>>>>>

ஜம்மு – காஷ்மீரில், , கடந்த நான்காண்டுகளில் , 27 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இதன் மூலம் 653 கிலோமீட்டர் தொலைவுக்கு, 43 நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

நடப்பாண்டில் இதுவரை ஆயிரத்து 262 கோடி ரூபாய் மதிப்பிலான சாலைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணிகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள், அப்பகுதியின் வாகனப் போக்குவரத்து மற்றும் வருங்காலத் தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றும் இந்தியர்களின் பிரச்சினைக்கு, அந்நாடு விரைவில் தீர்வு காணும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் .ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மாஸ்கோவில், ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.செர்ஜி லாவ்ரோவுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ரஷ்யப் படையில் பணியாற்றி, மாயமானவர்களை கண்டுபிடிப்பது குறித்து, ரஷ்ய அதிபர் திரு.புதின் மற்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சரிடம் பேச்சு நடத்தி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரத்தில், ரஷ்யா நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் உள்ள இந்தியர்களின் நலனைப் பாதுகாக்கவும், அவர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்பவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றிய இந்தியர்கள் பலர், போர் தொடர்பான பணிகளிலிருநது விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் திரு.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>

புலிகள் பாதுகாப்புக்கான சர்வதேச ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளதாக, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச புலிகள் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைகள் மற்றும் விதிவிலக்குகளை, இந்த அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கும் நீட்டிப்பதற்கான அறிவிப்பை, மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டிருப்பதை, தமது சமூக வலைதளப் பதிவில் அவர் பகிர்ந்துள்ளார்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கை, புலிகளையும், அவற்றின் வாழ்விடத்தையும் பாதுகாப்பதோடு, பூமியின் நலனைப் பாதுகாப்பதிலும் முக்கியமானதாக கருதப்படுகிறது என்றும் திரு.பூபேந்தர் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

*கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா நிறுவனர் ஏக்நாத் ரனடேயின் நினைவு தினத்தையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தன்னலமற்ற சேவை மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாக கொண்டு பணியாற்றிய ஏக்நாத் ரனடே, ஆர்எஸ்எஸ் இயக்கத்திலும் சிறப்பாக பணியாற்றியவர் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*நாட்டின் வளர்ச்சிக்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் அரும்பணியாற்றிய ஏக்நாத் ரனடேயின் சேவைகள் வருங்கால சந்ததியினருக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்றும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*

<<<<<<<>>>>>

*சென்னை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

*1639 ஆம் ஆண்டு இதேநாளில் சென்னை நகரம் உருவானதை நினைவுகூரும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்நாளையொட்டி தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி வெளியிட்டுள்ள செய்தியில், சென்னை மாநகர மக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.*

*வளமான பாரம்பரியமும், துடிப்பான கலாச்சாரமும், நவீனமயமான புதுமைகள், பசுமையான மற்றும் நீடித்த உணர்வுகள் சங்கமிக்கும் இடமாக சென்னை மாநகரம் திகழ்வதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.*

*சென்னை மாநகர மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதுடன் தொலைதூரங்களில் இருந்து வருவோரை வரவேற்று அவர்களுடன் ஒன்றிணைந்து நாட்டின் முன்னேற்றத்தையும் சிறப்புகளையும் வலுப்படுத்தி வருவதாகவும் ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.*

*முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வாழ வழிதேடுவோருக்கு நம்பிக்கை ஊட்டி வாழ்வளிக்கும் சென்னை, வெறும் ஊரல்ல என்றும், தமிழகத்தின் இதயத்துடிப்பு என்றும் கூறியுள்ளார்.*

*சென்னை நகரம் தங்களது வாழ்வோடு இணைந்த ஒன்றாகி விட்டதாக சென்னைவாசிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – சென்னைவாசிகள் – 52 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

இந்திய ராணுவத்தில் பல்வேறு பணிகளுக்கான அக்னிவீர் ஆட்சேர்ப்பு முகாம், தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் அடுத்த மாதம் 18- ந் தேதி முதல் 27-ந் தேதி வரை நடைபெற உள்ளது.

திருச்சியில் உள்ள ராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகம் சார்பில், ஜெனரல் டூட்டி, டெக்னிக்கல், கிளர்க், ஸ்டோர்கீப்பர் உள்ளிட்ட பணிகளுக்கு தேர்வு நடத்தப்பட உள்ளது.

தமிழகத்தில் உள்ள 17 மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த, 8-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள், , இத்தேர்வில் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

வெளிநாடு வாழ் இந்தியரான தொழிலதிபர் ஸ்வராஜ் பால் மறைவுக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இங்கிலாந்தின் தொழில்துறை வளர்ச்சிக்கும், பொது சேவையிலும் அவரது பங்களிப்பு அளப்பரியது என்று தெரிவித்துள்ளார். இந்தியாவுடன் அவர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு என்றும் நினைவுகூறத்தக்கது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

வினாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, 380 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுமென ரயில்வே துறை அறிவித்துள்ளது.

மகாராஷ்டிரா மற்றும் கொங்கன் பகுதிகளில், மத்திய ரயில்வே சார்பில் 296 ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

இந்த ரயில்களுக்கான கால அட்டவணை, IRCTC இணையதளம், ரயில் ஒன் செயலி மற்றும் முன்பதிவு மையங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம் என ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

பல்கேரியாவின் Samokov-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 76 கிலோ எடைப்பிரிவில் பிரியா மாலிக்கும், 55 கிலோ எடைப்பிரிவில் ரீனாவும் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

---------

Winston Salem ஒபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – நெதர்லாந்தின் Michael Venus இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------------

உலக இளையோர் வில்வித்தை போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

கனடாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் குழு பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

21 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் இந்திய ஆடவர் குழு இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<<>>>>>